**<u>DEPOSITION OF WITNESS</u>**

**IN THE COURT OF SUB COURT, USILAMPATTI**

**SUB JUDGE**

**S.C. No. 182/ 2025**

Deposition of witness for PW4

Name : பிரபாகரன்

Father Name :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.07.2026.

-----------------------------------------------------------------------------------------------------

எதிரி ஆஜர்.

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் அய்யனார்குளத்தில் குடியிருந்து விவசாய வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை</u>**

ஆஜர் எதிரியும், பாலசந்தர் என்பவரும் கணவர், மனைவி ஆவார்கள் என்றும், இருவருக்குள் அடிக்கடி பிரச்சனைகள் ஏற்பட்டு வந்தது என்றும், இந்நிலையில் கடந்த 08.06.2024ம் தேதி சுமார் இரவு 11.00 மணியளவில் பாலசந்தர் என்பவர் குடித்துவிட்டு எதிரியுடன் பிரச்சனை செய்தார் என்றும், அப்போது எதிரி பாலசந்தரை பார்த்துவிட்டு தினமும் குடித்துவிட்டு வருவதை வேலையாக வைத்து விட்டு, உன்னை கொலை செய்தால் எனக்கு நிம்மதியாக இருக்கும் என்றும், அதன்பின் இருவரும் வீட்டிற்கு சென்று விட்டு சிறு நேரத்தில் பாலசந்தரனின் அலறல் சத்தம் கேட்டு பார்த்த போது அவர் வீட்டின் திண்ணையில் கத்தியால் வெட்டு பட்டு பல இடங்களில் இரத்தக்காயத்துடன் இருந்தார் என்றும், என்னுடன் பாலசந்தரனின் அம்மா சிட்டம்மாள், அவரது அப்பா சுப்பு ஆகியோர்கள் வந்தார்கள் என்றும், நாங்கள் சத்தம் போட்டுக்கொண்டே பாலசந்திரரை காப்பாற்ற சென்ற போது அருகில் வந்தால் உங்களையும் கொல்லாமல் விட மாட்டேன் என்றும், பின்னர் பாலசந்திரரை விசாரித்த போது அவர் தூங்கி கொண்டிருக்கும் போது அவர் வீட்டில் இருந்த மீன் வெட்டும்

கத்தியை வைத்து அசிங்கமாக பேசி, இதோடு செத்து தொலைடா என்று தலையில் வலது புறமும் இடது புறமும் மாறி மாறி வெட்டினார் என்றும், மீண்டும் எந்திரிக்க முயற்சி செய்யும் போது கழுத்தை நோக்கி வெட்டும் போது சிறிது விலகி கொண்டதால் அவரது கண்ணத்தில் வெட்டுக்காயம் இருந்தது என்றும், நிலை தடுமாறி தன் கையில் வைத்திருந்த கத்தியால் இடது பக்க தோள்பட்டை, இடது கை மணிக்கட்டு மற்றும் இடது பக்க முன்கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது என்றும், வலது கையால் தடுக்க வலது கை நடுவிரலில் வெட்டியும், ஆத்தரத்தில் வலது பக்க காதில், வலது கழுத்துப்பகுதி, தலையில் மாறி மாறி வெட்டியதாகவும், வலி தாங்க முடியாமல் வீட்டின் கதவை திறந்து தப்பித்து வந்து சத்தம் போட்டதாகவும், பின்னர் காயம்பட்ட பாலசந்திரரை தனது ஆட்டோவில் ஏற்றி உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றும், போலீசார் விசாரணையில் கூறியிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

L MAHESWARI

Digitally signed by L MAHESWARI
Date: 2026.07.16 11:56:38 +0530

Assistant Sessions Judge,
Usilampatti.